பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 10 (27—10—71) புதன்   வெளியூர்: ஐப்பசி 11 (28—10—71) வியாழன் [இதழ்: 111

வங்க அகதிகளைப் பராமரிக்கக் கூடுதல் வரி விதிப்பு

புதுடில்லி, அக். 27—
வங்க அகதிகள் பராமரிப்புச் செலவைச் சமாளிப்பதற்காக மத்திய அரசு சில புதிய வரிகளை விதித்திருக்கிறதல்லவா?

பல்வேறு மாநிலங்களும் தம் எல்லைக்குட்பட்ட வரிகளை விதிக்க வேண்டுமென்று முதலமைச்சர்கள் மாநாட்டின் போது வற்புறுத்தப்பட்டது;

(4-ம் பக்கம் பார்க்க)

சீரழிந்த சிண்டிகேட் பரிதாப நிலை

ஆச்சாரியார் கட்சியின் அவலநிலை

பொள்ளாச்சித் தேர்தல் களத்தில் நிகழும் விநோதம்

சென்னை, அக். 27—

பொள்ளாச்சி இடைத் தேர்தலில் சிண்டிகேட் காங்கிரசுக் கட்சிக்கும் பரிதாபகரமான நிலை ஏற்பட்டிருக்கிறது!

சிண்டிகேட் சார்பில் முன்னாள் தமிழகச் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் பி. ஜி. கருத்திருமன் போட்டியிடுவார் என்று முதலில் சொல்லப்பட்டது; ஆனால், கடைசி நேரத்தில், நடராசன் என்ற நபரை சிண்டிகேட் காங்கிரசு நிறுத்தியிருப்பதாகக் கூறப்பட்டது.

சிண்டிகேட்டின் அதிகாரபூர்வமான வேட்பாளரின் பெயரைக் குறிப்பிட்டு அவருக்கு இரட்டைச் சின்னம் ஒதுக்க வேண்டும் என்று தமிழ்நாடு சிண்டிகேட் தலைவர் திரு. கக்கன், கோவை மாவட்டக் கலெக்டருக்குக் கடிதம் அனுப்பியிருந்ததாகவும் செய்தி வெளியாகியது.

ஆனால் என்ன காரணத்தாலோ, வேட்பு மனு தாக்கல் செய்ய இறுதி நேரம்வரை சிண்டிகேட் சார்பில் எந்த நபரும் வரவில்லை. வேட்பாளர் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட சிண்டிகேட் தலைமை, இப்போது, 'இரவல்' வேட்பாளரைத் தேடிச் சென்று ஆதரிக்க முனைந்திருக்கிறது!

சுயேச்சையாக மனுத் தாக்கல் செய்திருந்த ஆர். கிருஷ்ணசாமி கவுண்டர் என்பவருக்கு சிண்டிகேட் கட்சி தனது ஆதரவை அளிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர். கிருஷ்ணசாமி கவுண்டர் யார் தெரியுமா? 1967-ல் சுதந்தராக் கட்சி சார்பில் போட்டியிட்டுச் சட்டமன்ற உறுப்பினர் ஆகி—சட்டமன்றத்தில் மதுவிலக்கு எதிராகக் குரலெழுப்பியவர்! பின்னர், விவசாயிகள் போராட்டத்துக்குத் தலைமை தாங்கப்போவதாகக்கூறி சுதந்தராக் கட்சியிலிருந்து விலகியவர்!

சிண்டிகேட்டுக்கே இந்த நிலை என்றால், சுதந்தராவுக்குக் கேட்கவா வேண்டும்? சுதந்தராக் கட்சி பொள்ளாச்சியில் தனது வேட்பாளரை நிறுத்தப்போவதில்லை என்றும், சிண்டிகேட் நிறுத்தும் வேட்பாளரையே ஆதரிக்கும் என்றும் முன்னர் கூறப்பட்டது.

சிண்டிகேட் வேட்பாளர் நிறுத்தப்படாததால், சிண்டிகேட்டால் ஆதரிக்கப்படும் சுயேச்சை வேட்பாளரையே சுதந்தரக் கட்சி ஆதரிக்க இப்போது முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

பழைய சுதந்தராவான 'சுயேச்சை'யை சிண்டிகேட் ஆதரிக்க—அந்தச் சுயேச்சையைச் சுதந்தரா ஆதரிக்க—பொள்ளாச்சியில் தேர்தல் களம் அமைத்திருக்கிறார்கள்!

மதுவிலக்கை எதிர்த்த 'மாஜி சுதந்தரா'வுக்கு 'மதுவிலக்கு மறியல் தியாகி'களின் பேராதரவாம்!

'எங்கள் தலைவர் என்ன சொன்னாலும் கவலையில்லை; நான் சொல்லுகிறேன்—கள்ளுக் கடையைத் திறந்துவிடுங்கள்' என்று சட்டமன்றத்தில் பேசியவருக்கு, ஆச்சாரியாரின் ஆசியுடன் சுதந்தராக்களின் ஆதரவு கிடைக்கப்போகிறதாம்!

1971 தேர்தலில், 'மாபெரும் கூட்டணி' அமைத்துப் போட்டியிட்ட அதே மகானுபாவர்கள்தான், மீண்டும் பொள்ளாச்சி வாக்காளர்களைச் சந்திக்க வருகிறார்கள்!

இரண்டுமுறை உடுமலை நாராயணனை வெற்றி பெறச் செய்து கழகத்துக்கு வாகை சூட்டிய பொள்ளாச்சி வாக்காளப் பெருமக்கள், இந்தச் சந்தர்ப்பவாத வேடதாரிகளின் முகமூடியைக் கிழித்துக்காட்டத் தவறமாட்டார்கள்!

'முற்போக்குக் கூட்டணி'யைச் சார்ந்த தோழமைக் கட்சிகளின் பேராதரவைப் பெற்றும் போட்டியிடும் தி. மு. க. வேட்பாளர் மோகன்ராசுவே மகத்தான வெற்றி பெறப்போகிறார் என்பது உறுதியிலும் உறுதியாகும்.

22 ஆண்டு முயற்சிக்குப் பின் நீதிக்குக் கிடைத்த வெற்றி

செஞ்சீனாவுக்கு ஐ. நா. அவையில் இடம்

தைவானை வெளியேற்றியதன் விளைவு—தருகின்ற உதவியைக் குறைக்க அமெரிக்கா திட்டம்?

உலக நிகழ்ச்சிகளில் பெரும் மாறுதல் ஏற்படும்

நியூயார்க், அக். 27—

கம்யூனிஸ்டுச் சீனாவை ஐ. நா. அவையில் அனுமதிப்பது என்று முடிவு செய்யப்பட்டது; அத்துடன், இதுவரையில் சீனாவின் இடத்தில் அமர்ந்திருந்த தைவான் நாட்டை ஐ. நா.-விலிருந்து வெளியேற்றுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த முடிவு, எவரும் எதிர்பார்க்காததாகும். அமெரிக்கா, தைவானை வெளியேற்றாமலிருக்கப் பெரு முயற்சி செய்தும் பயனற்றுப் போய்விட்டது; முடிவு தனக்கு அதிர்ச்சி அளிப்பதாக அமெரிக்கா கூறியது.

செஞ்சீனாவை அனுமதித்து—தைவானை வெளியேற்ற வேண்டும் என்ற தீர்மானத்தை, அல்பேனிய நாடு கொண்டுவந்தது.

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஐ. நா. அவையில் சீனா அனுமதிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வருகிறது; ஆண்டுதோறும் இதற்கான தீர்மானம் கொண்டுவரப்படுவதும்—அது தோற்கடிக்கப் படுவதும் வழக்கமான நிகழ்ச்சியாக இருந்து வந்தது; ஆனால், மேலும் பல உலக நாடுகள் சீனாவை ஆதரிக்க வந்ததும், அண்மைக்காலங்களில் வெளிநாடுகளுடன் சீனா கடைபிடிக்கும் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதும், சீனாவுக்கு அதிக ஆதரவைத் திரட்டித் தந்துவிட்டது.

சீனாவை அனுமதித்தாலும், தைவானை வெளியேற்றக் கூடாது என்பதற்கு அமெரிக்கா எல்லாவிதமான நிர்ப்பந்தங்களையும் கையாண்டு பார்த்தது; சில நாட்களாகவே அமெரிக்கா தனது ஆதரவாளர்களை இதற்காக வற்புறுத்தி வந்தது; ஆயினும், அமெரிக்காவின் நட்பு நாடுகளே அமெரிக்காவுக்கு எதிராக வாக்கு அளித்திருக்கின்றன.

ஐ. நா.-வின் 200 மில்லியன் டாலர் வரவு—செலவுத் திட்டத்தில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கை அமெரிக்காவே தருகிறது. தைவானை வெளியேற்ற ஐ. நா. அவை முடிவு செய்தால் இந்தத் தொகையைக் குறைக்க நேரிடும் என்று கூட அமெரிக்காவில் சிலர் அச்சுறுத்தினர்.

இத்தனை நிர்ப்பந்தங்களையும் மீறி சீனா அனுமதிக்கப்பட்டிருப்பது, நீதிக்குக் கிடைத்த வெற்றியாகும் என்று கருதப்படுகிறது.

ஐ. நா.-வின் முடிவை, பொதுச்செயலாளர் ஊதாண்ட் சீனாவிடம் அறிவித்தார்.

விரைவில் ஐ. நா. அவைக்குத் தனது தூதுக் குழுவை செஞ்சீனா அனுப்பிவைக்கும் என்று நம்பப்படுகிறது.

ஐ. நா. அவையிலிருந்து ஒரு நாடு வெளியேற்றப்படுவது இதுவே முதலாவதாகும்.

தைவானை வெளியேற்றுவது—என்ற தீர்மானம் நிறைவேறியதும், தைவான் வெளிநடப்புச் செய்தது.

ஐ. நா. கொடிக் கம்பத்திலிருந்து தைவான் நாட்டுக்குக் கொடி இறக்கப்பட்டது; இந்த இடத்தில் இனிமேல் சீனக் கொடி பறக்கவிடப்படும்.

சீனா அனுமதிக்கப்பட்டிருப்பதை உலகின் முற்போக்கு நாடுகள் பலவும் வரவேற்றிருக்கின்றன.

இந்திரா காந்தி மகிழ்ச்சி

பெல்ஜியத்தில் சுற்றுப்பயணம் செய்துவரும் இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி, ஐ. நா.-வில் சீனா அனுமதிக்கப்பட்டிருப்பதற்கு மகிழ்ச்சி தெரிவித்தார்.

டெல்லியில் வெளியுறவுத் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்றில், சீனாவை அனுமதிக்க வேண்டுமென்று கடந்த 22 ஆண்டுகளாக வாதாடிய நாடு என்ற முறையில், இதில் தனி மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்திருக்கிறது.

பாதுகாப்புச் சபையிலும் செஞ்சீனா நிரந்தர உறுப்பினராகியிருப்பதால், உலக நிகழ்ச்சிகளில் பெரும் மாறுதல்கள் ஏற்படக்கூடும் என்று நம்பப்படுகிறது.

இச்சபைகளில் நிரந்தர உறுப்பினர்களாக இருக்கும் அமெரிக்கா, இரஷ்யா, பிரிட்டன், பிரான்சு, சீனா ஆகிய ஐந்து வல்லரசுகளிடம், ஐ.நா.-வின் எந்தத் தீர்மானத்தையும் இரத்துச் செய்யும் 'வீட்டோ' அதிகாரம் இருந்துவருகிறது.

அகதிகள் உருவில் உளவாளிகள்

கல்கத்தா, அக். 27—

போர் வெறியில் மூழ்கியிருக்கும் பாகிஸ்தான், இந்தியாவில் ஏராளமான ஊடுருவல்காரர்களை அனுப்பி வைத்து, உளவு வேலையிலும்—நாசவேலையிலும் ஈடுபடுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது.

இவர்கள் பெரும்பாலும் எல்லை மாநிலங்களில் ஊடுருவி இருக்கிறார்கள்.

இவர்களைத் தேடிப் பிடிப்பதில் மாநில அரசுகள் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றன.

மேற்கு வங்கத்தில் மட்டும் இதுவரையில் 900 பாகிஸ்தான உளவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

இதுபோல், பீகார், அசாம் மாநிலங்களிலும் ஏராளமானோர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இங்குள்ள அகதிகள் முகாம்களிலெல்லாம் பலத்த கணகாணிப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

புதுமையான போராட்டம்!

திருவனந்தபுரம், அக். 27—

தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தும் பொருட்டுக் கேரள இசைப் பள்ளி மாணவர்கள் புதுமையான போராட்டம் ஒன்றைத் துவக்கியிருக்கின்றனர்.

கேரளச் சட்டமன்ற 'சத்தியாக்கிரக வாயிலி'ல் (நாள்தோறும் இங்கு ஏதாவது ஒருவகையில் சத்தியாக்கிரகம் நடைபெற்று வருவதால் இந்த வாயிலுக்கு 'சத்தியாக்கிரக வாயில்' என்ற பெயர் நிரந்தரமாக நிலைத்துவிட்டது) இந்த மாணவர்கள் 200 பேர் கூடி கச்சேரி நடத்திச் சத்தியாக்கிரகம் செய்தனர்.

இசைக் கருவிகளைப் பயன்படுத்தி இவர்கள் நடத்தும் போராட்டம், போலீசாருக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியது; போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்பட்டது.

இவர்களில் பெரும்பாலோர், பெண்கள் ஆவர்; இசைக் கருவிகளைப் போலீசார் எடுத்துச் சென்றதும் இவர்கள், வாயால் பாடத் தொடங்கினர்; முறையான ஓர் இசைக் கச்சேரி போலவே இருந்த இவர்களது சத்தியாக்கிரகத்தைப் பொதுமக்களும், அரசுச் செயலக ஊழியர்களும் கூடிநின்று ரசித்தனர்!

நம் நாடு
ஆசிரியர்: இரா. செழியன்
திருவள்ளுவராண்டு 2002 ஐப்பசி 10 (27—10—71) புதன்

இருபத்திரண்டு ஆண்டுக்குப் பின் கிடைத்த நீதி!

சீன மக்கள் குடியரசு ஏற்பட்டு 22 ஆண்டுகளுக்கும் பிறகு ஐக்கிய நாடுகள் பேரவையில் இப்பொழுதுதான் முதன் முதலாக அதற்கு இடம் கிடைத்திருக்கிறது - 131-வது நாடாக சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

ஐ. நா. பேரவையின் பாதுகாப்புக் கவுன்சில் நிரந்தர உறுப்பினராகவும் சீன மக்கள் குடியரசு சேர்த்துக் கொள்ளப்பட்டது; இது, அதிகாரம் உள்ள பொறுப்பாகும்.

இத்தனை ஆண்டுக்காலமாக, 'தேசிய சீனு' என்ற பெயரில் ஐ. நா.-வில் உறுப்பு நாடாக இருந்துவந்த தைவான் (சியாங்-கே-ஷேக் தலைமையிலான சீனு), ஐ. நா.-விலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பது அமெரிக்காவுக்கு அதிர்ச்சி தரத்தக்கதாகும்.

சீனுவை ஐ. நா.-வில் உறுப்பினராக்கும் தீர்மானததிற்கு ஆதரவாக 76 வாக்குகளும் -- எதிராக 35 வாக்குகளும் பதிவாயின; 17 நாடுகள் நடுநிலைமை வகித்தன.

தைவானை (சியாங்-கே-ஷேக் சீனு) வெளியேற்றுவதற்கு மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை வேண்டுமென்று அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்திற்கு எதிராக 59 வாக்குகளும் -- எதிராக 55 வாக்குகளும் பதிவாயின; 15 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை; இதனுல், சியாங்-கே-ஷேக் தலைமையிலான தைவான் சீனுவை, 'தேசிய சீனு' என்று சொல்லி -- ஐ. நா. விலிருந்து அதனை வெளியேற்றாமலிருக்க முயன்றுவந்த அமெரிக்காவுக்குப் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது--அது கையாண்ட இராஜதந்திர முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப் போய்விட்டன!

தைவானை விலக்குவதென்று முடிவு செய்தால், 'ஐ நா.-வுக்கு அமெரிக்கா தந்துவரும் நிதியுதவி கணிசமாக வெட்டப்பட்டுவிடும் என்ற அச்சுறுத்தலும் பயன் தரவில்லை!

வலிமைமிக்க அமெரிக்காவே முன்வந்து, கம்யூனிஸ்டு சீனுவுடன் நட்புறவு கொள்வதென முடிவு செய்துவிட்ட பிறகு, 'பீகிங்கிற்கு முழு ஆதரவு தருவதும் -- தைவானை வெளியேற்றுவதும் சரியானதே ஆகும்' என்று பல நாடுகள் முடிவு செய்ததில் வியப்பு ஏதுமில்லை.

1948-ம் ஆண்டில் சீனுவில் புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து அங்கு கம்யூனிஸ்டு ஆட்சி ஏற்பட்டது; இதன் காரணமாக, அதுவரையில் சீனுவின் தலைவராக இருந்த சியாங்-கே-ஷேக், சீனுவுக்கு அருகில் உள்ள பார்மோசா (தைவான்) தீவுக்கு வெளியேறிச் சென்றார்; அங்கிருந்தவாறு, 'நான்தான் உண்மையான சீனத் தலைவன் -- நான் இருக்கும் இடம்தான் சீனு' என்று கூறிவந்தார்.

சியாங்-கே-ஷேக்கை அமெரிக்கா ஆதரித்தது; அதன் காரணமாக ஐ. நா.-வில் தைவானுக்கு இடம் கிடைத்தது; கம்யூனிஸ்டு சீனுவுக்கு இடம் கிடைக்கவில்லை.

'ஐ. நா.-வில் சீனுவை சேர்த்துக்கொள்ள வேண்டும்' என்று இந்தியா பலமுறை வற்புறுத்தியது; ஆனுல், அதற்காகக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் தோற்கடிக்கப்பட்டன.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பினர்களில் செஞ்சீனுவும் ஒன்ருகிவிட்டது; அதற்கு வெட்டுத் தீர்மானம் கொண்டுவரும் 'வீட்டோ' அதிகாரம் உண்டு; இந்தப் பெரிய பொறுப்பை, அது எவ்வாறு செயல்படுத்தப்போகிறது என்பது, இனித்தான் தெரியவேண்டும்.

உலக மன்றங்களில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு -- பல்வேறு பிரச்சினைகளைப் பரிசீலனை செய்து -- அவசியம் ஏற்படுகையில் விட்டுக்கொடுத்து -- உலக சமாதானத்துக்கும், வளமிக்க வாழ்வுக்கும் வழிகோலுவதற்கான அனுபவம் பீகிங் அரசுக்கு ஏற்பட்டதில்லை; உலக நாடுகளிடையே தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரச்சினைகள், பெரும் அளவில் அதற்கு இருக்கின்றன; இவற்றைப் பொறுத்துத்தான் அதன் எதிர்கால நடைமுறைகளைக் கணிக்க இயலும்.

தன்னிடமுள்ள பணவலிமையையும் -- படை வலிமையையும் கொண்டு, 'நினைத்ததையெல்லாம் செய்ய முடியும்' என நம்பியிருந்த அமெரிக்காவுக்குச் சரியான பாடம் புகட்டிவிட்டது ஐ நா. பேரவை; 'இனி, ஐ.நா. மன்றமும் தனது கைப்பாவையாக இயங்காது' என்பது அமெரிக்காவுக்குப் புரிந்துவிட்டது!

இருபத்திரண்டு ஆண்டுக்குப் பிறகாவது, சீனுவைச் சேர்த்துக் கொள்ளும் பிரச்சினையில், நீதியை நிலைநாட்டிய உலகப் பெருமன்றமான ஐ நா. பேரவையைப் பாராட்டுகிறேம்.

தனது பகை நாடாக இருந்தும்கூடப் பொருட்படுத்தாமல் அதனை ஐ.நா. மன்றத்தில் சேர்ப்பதற்குத் துவக்கமுதல் முனைந்து செயல்பட்டுவந்த இந்தியாவின் பெருந்தன்மையை இனியேனும் சீனு உணர்ந்து, நன்றியறிதலுடன் நடந்துகொள்ளும் என்று நம்புவோமாக!

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன; சில இடங்களில் வேலை தொடங்கப்பட்டிருக்கிறது.

ஏழை மக்களுக்கு நிரந்தர வீட்டு வசதி ஏற்படுமானுல், வெள்ளம் -- தீக் கொடுமை போன்றவற்ருல் பாதிக்கப்படும் மக்களைப் பாதுகாக்க அரசால் முடியும்; அந்த வகையில் குடிசைமாற்றி வாரியம் தீவிரமாகச் செயல்பட்டுவருகிறது.

இந்நிலையில் சிலர், குடிசைகளை மாற்றுவதால் பெரிய பொருளாதார நட்டம் ஏற்படும் என்று கருவதைப் பார்க்கும் போது வேதனையாக இருக்கிறது.

சென்னையில் இனிமேல் புதிதாக யாரும் குடிசைகளைக் கட்டாத அளவு குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

குடிசை மாற்றும் பணி 7 ஆண்டுத் திட்டமாக இந்தாலும், ஐந்தாறு ஆண்டுகளில் முடிந்துவிடும் அளவில் வேகமாகச் செயல்பட்டுவருகிறது; என்ருலும், இப்படிப்பட்ட விபத்துக்கள் நேரிடும்போது கண்ணும் கருத்துமாக இருந்து அரசும் -- மாநகராட்சியும் துயர் தணிப்புப் பணிகளைச் செய்துவருகின்றன.

மழையினுல் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு நிவாரணம் அளிக்க முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 25,000 தருவதாக இங்கு அறிவிக்க விரும்புகிறேன்.''

முதல்வர் அளித்த விளக்கத்தின் பேரில் ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

பொள்ளாச்சி இடைத் தேர்தல்

நவ. 14-ல் முடிவு அறிவிப்பு

கோவை, அக். 26—

''பொள்ளாச்சி இடைத் தேர்தலில் நவ. 13-ம் நாளன்று வாக்குப் பதிவு நடைபெறும்; அடுத்த நாள் மாலைக்குள் முடிவு அறிவிக்கப்படும்''

என்று கோவை மாவட்டக் கலெக்டர் நிருபர்களிடம் கூறினுர்.

நான்காண்டில் பெருகியுள்ள சிறு தொழில்கள்

லைசென்சு வழங்குவதில் தாமதத்தைத் தவிர்க்க நடவடிக்கை

சட்டப் பேரவையில் அமைச்சர் செ. மாதவன் தகவல்

சென்னை, அக். 25—

''சிறு தொழில்களுக்கு லைசென்சு வழங்குவதில் உள்ள காலதாமதத்தைத் தவிர்ப்பதற்குப் புதிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது''

என்று சட்டப் பேரவையில், தொழில் துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள் தெரிவித்தார்.

எச். வி. ஹண்டே (சுதந்தரா):— ''சிறு தொழில்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறதா-குறைந்திருக்கிறதா?''

அமைச்சர்:— ''1967 டிசம்பர் முடிய 11,929 சிறு தொழில்கள்தான் பதிவாகியிருந்தன; அடுத்த நான்காண்டுக் காலத்திற்குள் -- இந்த ஆண்டு ஜூன் முடிய -- 28,208 சிறு தொழில்கள் பதிவாகி இருந்தன; ஆக, முன்பைவிட இரு மடங்கு அதிகமாகி இருக்கிறது.

''இவைகளுக்கு லைசென்சு வழங்குவதில் உள்ள தாமதத்தைத் தவிர்க்க மாவட்டந்தோறும் குழுக்கள் அமைத்து -- விரைவாகப் பரிசீலனைகளை முடிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது; ஆகவே, தாமதம் தவிர்க்கப்படும்.''

தென் சென்னையில் பால் பண்ணை

விரைவில் துவங்க அரசு நடவடிக்கை

சட்டப் பேரவையில் அமைச்சர் எம். கண்ணப்பன் அறிவிப்பு

சென்னை, அக். 25—

''மாதவரம் பால் பண்ணையைப்போல் தென் சென்னையில் மற்ருெரு பால் பண்ணை ரூ. 55 இலட்சம் செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டு வருகிறது''

என்று சட்டப் பேரவையில், கேள்வி நேரத்தின்போது அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள் தெரிவித்தார்; இதன் தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விகளும் - அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:--

எச். வி. ஹண்டே (சுதந்தரா):— ''சென்னை நகரத்திற்கு இரண்டாவது பால் பண்ணைத் திட்டம் கிண்டிக்கு அருகில் அரசாங்கத்தால் துவங்கப்பட இருக்கிறதா? அதற்கு எவ்வளவு செலவாகும்?''

அமைச்சர்:— ''மாதவரம் பால் பண்ணையில் போதிய இடவசதி இல்லை; தென் சென்னையில்தான் பால் விற்பனை அதிகம்; விநியோக வேலைகளும் அதிகம் இருக்கின்றன; ஆகவே, தென் சென்னையில் இரண்டாவது பால் பண்ணைத் திட்டத்தை ரூ. 55 இலட்சம் செலவில் தொடங்க 11—3—70-லேயே அனுமதி கொடுக்கப்பட்டுவிட்டது; இதற்கான வேலைகளை விரைவில் தொடங்க வேண்டும் என்று சென்னை — செங்கற்பட்டு கலெக்டர்களுக்குத் தெரிவித்திருக்கிறேம்; அவர்கள் 9 இடங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிருர்கள்; அந்த இடங்களையெல்லாம் அகில இந்திய பால் வளர்ச்சித் துறை அதிகாரி ஒருவர், 17—6—71-ல் சுற்றிப் பார்த்தார்; அதற்கான நீர் வசதி பற்றியும் — கழிவு நீர்களை வெளியேற்றும் வசதி பற்றியும் பார்த்து அறிந்தார்; விரைவில் தொடங்க ஏற்பாடு நடக்கிறது.''

அனந்தநாயகி (சிண்டிகேட்):— ''இந்தப் பால் பண்ணை அரசுத் துறையில் இருக்குமா? அல்லது அரசு -- தனியார் கலந்த கலப்புத் துறையில் இருக்குமா?''

அமைச்சர்:— ''அரசுத் துறையிலேயே இருக்கும்.''

வீராசாமி (தி.மு.க.):— ''கல்கத்தாவிலிருந்து சென்னைக்குக் குழாய் மூலமாகப் பாலை 'பம்பு' செய்து அனுப்பப் போவதாகப் பத்திரிகையில் செய்தி வந்ததே -- அதன் விவரம் என்ன?''

அமைச்சர்:— ''பம்பாயிலிருந்து கல்கத்தாவுக்கு அனுப்புவதாகத்தான் இருக்கிருர்கள்; கல்கத்தாவிலிருந்து சென்னை வர நாள் ஆகும்.''

டென்னிஸ் (சிண்டிகேட்):— ''மாதவரம் பால் பண்ணையில் பாட்டில்களைச் சரியாகக் கழுவாததால், அதில் வரும் பால் திரிந்து கெட்டுவிடுகிறது; அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?''

அமைச்சர்:— ''அந்தக் குறை இப்போது இல்லை.''

அனந்தநாயகி (சிண்டிகேட்):— ''இப்போதெல்லாம் பாட்டில் பாலில் ஏதோ நாற்றம் வீசுகிறது; பல ஊர்ப் பாலையும் — பழைய பாலையும் கலப்பதால்தான் இவ்வாறு ஏற்படுகிறது; இதைத் தவிர்க்க, தென் சென்னையில் விரைவில் இரண்டாவது பால் பண்ணை ஏற்படுத்தப்படுமா?''

அமைச்சர்:— ''தென் சென்னையில் இரண்டாவது பால் பண்ணைக்கான இடம் இன்னும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.''

அந்தமானிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள்

போர்ட்பிளேர், அக். 27—

பாகிஸ்தான் போர் மிரட்டல்களைத் தொடர்ந்து அந்தமான் தீவிலும் சிவில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இதையொட்டி, அதிகாரிகள் - பிரமுகர்கள் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு விவாதிக்கப்பட்டது.

ரூ.2 லட்சம் அபராதம்-- பத்தாண்டுச் சிறை

புகை கக்கும் கார்களை ஓட்டுபவருக்குத் தண்டனை

பான் (டாட்)—

அளவுக்கு மீறி கரும் புகையைக் கக்கிக்கொண்டு செல்லுகின்ற லாரி ஓட்டிகள்மீது சென்னை நகரப் போலீசார் நடவடிக்கை எடுத்துத் தண்டித்துவருகிருர்கள்; ஜெர்மனியுடன் ஒப்பிடும்போது, இந்தத் தண்டனை குறைவேயாகும்.

சுற்றுப்புறச் சுகாதாரத்திற்குத் தீங்கு விளைவிப்பவர்களுக்கு 10 ஆண்டுச் சிறைத் தண்டனை அல்லது ரூ. 2 இலட்சம் அபராதம் விதிக்க வகை செய்யும் சட்டம், ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் கொண்டுவரப்பட விருக்கிறது; ஜெர்மன் அமைச்சரவை, இதற்கான மசோதாவை இயற்றி நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

தொழிற்சாலைமுதல் சாதாரண புல்வெட்டும் இயந்திரத்தை இயக்குபவர்வரையில், கூடியவரையில் சுற்றுப்புறச் சுகாதாரத்திற்குத் தீங்கு விளையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்; இதற்கான விதிமுறைகள் இப்போது கடுமையாக்கப்பட்டுள்ளன.

பெரிய தொழிற்சாலைகள், தங்கள் கழிவுப் பொருளையும் -- நச்சுப் புகையையும் சுத்தம் செய்ய என்ன ஏற்பாடு செய்து இருக்கின்றன என்பதை அரசுக்கு முன்கூட்டியே தெரிவிக்கவேண்டும்.

இதேபோன்று, அவசரக் காலத்தில் காற்றின் தூய்மையைப் பாதுகாக்கத் தொழிற்சாலைகளை மூடிவிடவும், மோட்டார் போக்குவரத்தைத் தடை செய்யவும் அரசுக்கு இம்மசோதா அதிகாரம் அளிக்கிறது.

கரும்புகை அதிகம் வரக்கூடிய எரிபொருளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து விற்பனை செய்வதையும் அரசு கட்டுப்படுத்துகிறது.

இதற்கு முதற்படியாக, ஏற்கனவே பெட்ரோலில் ஈயக் கலவைக் குறைக்கும்படி ஜெர்மன் அரசு உத்தரவிட்டிருக்கிறது; இதனைப் பின்பற்றும்படி ஐரோப்பிய பொதுச் சந்தையின் பிற நாடுகளையும் ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு வேண்டிக்கொண்டிருக்கிறது.

எங்களை இகழ்வதையும் பொருட்படுத்தவில்லை --- அண்ணுவைப் புகழக்கண்டு பெருமைகொள்கிறேம்

மாற்றுரை மதிக்கும் பண்பு அண்ணுவால்தான் போற்றி வளர்க்கப்பட்டது

கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. அண்ணு பிறந்த நாள் விழா --- கலைஞர் கருணுநிதி சிறப்புரை

சென்னை, அக். 26

''அறிஞர் அண்ணு அவர்களைப் புகழ்கின்றவர்களில் இரண்டு வகையினர் உண்டு; ஒன்று, நாவலரைப்போல் -- என்னைப்போல் -- கழக முன்னணியினரைப்போல் -- சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களைப்போல் -- கழகத்தின்பாலும் அறிஞர் அண்ணு அவர்களின்பாலும் உண்மையான அன்புகொண்ட மற்ற கட்சிப் பெரியவர்களைப் போல் புகழ்கின்றவர்கள் ஒரு வகையினர்; வேறு சிலர், அறிஞர் அண்ணு அவர்களை இப்போது புகழ்கிருர்கள் -- நம்மை இகழ்வதற்காக! தாக்குவதற்காக!!

''இதில் உள்ளபடியே நாங்கள் மகிழ்ச்சியடைகிறேம் -- 'நாம் தாக்கப்பட்டாலும் பரவாயில்லை; அண்ணுவின் புகழைப் பேசுகிருர்களே' என்பதுதான் அந்த மகிழ்ச்சி''

என்று கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், நேற்று சென்னைக் கலைவாணர் அரங்கில், கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. சார்பில் நடந்த அண்ணு பிறந்த நாள் விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

காலையில், 'அண்ணு என்றும் வாழ்கிருர்-மனிதாபிமானத்தாலா? மொழிப் பற்ருலா?' எனும் தலைப்பில் பட்டி மன்றம் நடைபெற்றது; சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் நடுவராக இருந்தார்.

'மனிதாபிமானம்' எனும் அணித் தலைவராக அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் இருந்து உரையாற்றினுர். அவரது அணியில்— ஒளவை நடராசன், துரைமுருகன், என். வி. என். செல்வம் ஆகியோர் வாதிட்டனர்.

'மொழிப் பற்றே' எனும் தலைப்பின் அணித் தலைவராக அமைச்சர் க. இராசாராம் அவர்கள் இருந்து உரையாற்றினுர்; அவரது அணியில்—திருப்பத்தூர் இராமமூர்த்தி, ரகுமான் கான் ஆகியோர் வாதிட்டனர்.

'அண்ணு என்றும் வாழ்வது, மனிதாபிமானத்தாலும் -- மொழிப் பற்ருலும்தான்' என்று நடுவர் தீர்ப்பளித்தார்.

மாலையில் திருமதி யு. ஆர். சீவரத்தினம் இசை நிகழ்ச்சிக்கும் பின் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்குக் கொளத்தூர் கோதண்டம் தலைமைவகித்தார்.

திருவாளர்கள் ரகுமான் கான், தஞ்சை மாவட்டச் செயலாளர் மன்னை நாராயணசாமி எம்.எல்.சி., அமைச்சர்கள் எஸ். இராமச்சந்திரன், எஸ். ஜே. சாதிக் பாட்சா, செ. மாதவன், ப. உ. சண்முகம், பொதுச்செயலாளர் நாவலர் ஆகியோர் பேசியபின், முதல்வர் கலைஞர் உரையாற்றினுர்.

இறுதியில், சிவகங்கை சேதுராசனின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

கலைஞர் தமது உரையில் மேலும் கூறியதாவது:—

''காமராசரே புகழ்ந்துபேசுகிருர்- 'அண்ணு இருந்திருந்தால் மதுவிலக்கு ரத்தாகி இருக்குமா' என்று!

ஏதோ--அகில இந்தியக் காங்கிரசுத் தலைவராக அவர் இருந்தபோது-ஆந்திரத்தில் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டபோது பிரமானந்த ரெட்டியாரின் வீட்டு எதிரில் போய் மறியல் செய்தவரைப் போலவும், மைசூரில் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்ட போது வீரேந்திர பட்டீலைத் தடுத்தது போலவும், மராட்டியத்தில்--மற்ற இடங்களில் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்ட போது அங்கெல்லாம் ஓடோடிச்சென்று, 'நீ காங்கிரசுக் கட்சியிலிருந்து இராஜினாமா செய்துவிடு -- கதர்க் குல்லாயைக் கழற்று--காந்தியார் படத்தை மாட்டாதே' என்று அறிவுரை கூறியதைப் போலவும் நினைத்துக்கொண்டு பேசுகிருர்.

அது மட்டுமல்ல; காமராசர் பேசியிருக்கிருர்--'ஏழை மக்களை நினைத்தால்... அப்பப்பா' -- பத்திரிகைத் தலைப்பே அப்படிப் போட்டிருக்கிருர்கள்.

'ஆடுகளை நினைத்தால்... அய்யய்யோ' என்று வேங்கை பரிதாபம் காட்டியதைப்போலத்தான், காமராசர் ஏழைகளைப் பற்றிப் பேசும்போது, 'ஏழைகளை நினைத்தால்... அப்பப்பா' என்று குறிப்பிட்டிருக்கிருர்.

மாற்றுக் கட்சிகளைக் காமராசர் மதிக்கும் இலட்சணம் இதோ!

காமராசர் இரஷ்யாவுக்குச் சென்ருர்; அப்போது அதுபற்றி அறிஞர் அண்ணு அவர்கள் 'ஒரு தமிழனுக்கு பெருமை கிடைக்கிறது என்பதற்காக நான் மகிழ்கிறேன்' என்று கூறினுர்.

காமராசர் இரஷ்யா சென்று திரும்பி வருகிருர்; இரஷ்யாவில் என்னென்ன கண்டார் என்பதையெல்லாம் சொல்லுவார்' என மக்கள் எதிர்பார்த்தார்கள்!

'லெனின் கல்லறை கண்டேன்--கிரெம்ளின் மாளிகை கண்டேன்' என்றெல்லாம் கூறவில்லை காமராசர்!

ஆனுல் காமராசர், 'தி. மு. கழகத் தலைவர்கள் பிறப்பிலே சந்தேகப்படுகிறேன்' என்றுதான் பேசினுர்!

இரஷ்யாவுக்கு அவர் போய்விட்டுவந்த பிறகு ஏற்பட்டது அந்தச் சந்தேகம்தான்!

இப்போர்ப்பட்டவர்தான் கூறுகிருர் --தி. மு. கழகம், மாற்றுக் கட்சிக்காரர்களை மதிப்பதில்லை' என்று!

மக்கள் அப்படிப் பேசுவது உண்மையே!

காமராசர் சில நாட்களுக்கு முன் பேசியிருக்கிருர் -- 'கழக ஆட்சியின் கொடுமையைத் தாங்காத மக்கள், 'மகராசன் காங்கிரசு' என்று பேசிக் கொண்டார்களாம்!

உண்மைதான்; மக்கள் முதலிலே, பாவிகள்' என்றுதான் அவர்களைச் சொன்னுர்கள்; இப்போது மகராஜாக்கள் பக்கம் சேர்ந்துவிட்டார்கள் அல்லவா? -- அதனுல் 'மகராசன்' என்கிருர்கள்!

மக்கள் 'மகராசன் காங்கிரசுக்காரன்' என்று கூறுவது உண்மைதான்!

முன்பு -- காங்கிரசு ஆட்சியில், அரிசி கிடைக்கவில்லை; இப்போது கழக ஆட்சியில் அரிசி ஒழுங்காகக் கிடைக்கிறது.

இப்படி அரிசி ஒழுங்காகக் கிடைக்கும் வகையில், 'மகராசன் --- காங்கிரசுக்காரன் ஒதுங்கிக்கொண்டானே' என்று பேசுவது உண்மைதான்!

நல்லுணர்வாக உருவெடுத்தது

குறிப்பிட்ட நாளில்தான் அறிஞர் அண்ணு அவர்களின் பிறந்த நாள் கொண்டாட வேண்டும் என்றில்லாமல், எந்த நாளும் கொண்டாடத்தக்க அளவில் அண்ணுவின் பிறந்த நாள், தமிழினம் விழிப்படைந்த நாளாக-தமிழ் மறுமலர்ச்சியடைந்த நாளாக -- சீர்திருத்தக் கருத்து முகிழ்த்த நாளாக --- எழுச்சி பிறந்த நாளாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது!

அவரால் உருவாக்கப்பட்ட எழுச்சியும் -- மறுமலர்ச்சியும்—கிளர்ச்சியும், தமிழகத்தில் நல்லுணர்ச்சியாக உருவெடுத்தது.

அவருக்குப் பின் --- அவரால் உருவாக்கப்பட்ட நாங்கள், அவர் காட்டிய வழியில் தமிழ்ச் சமுதாயத்தில் பணியாற்றுகிறேம்.

ஒரு படை வரிசையை உருவாக்கிச் சென்ருர்

வேறு கட்சியில் எத்தனையோ தலைவர்கள் இருந்திருக்கிருர்கள்; ஆனுல் அவர்கள் எல்லாம் தங்களுக்கும் பின்னுல் வாரிசுகளை உருவாக்கவில்லை.

ஆனுல், தனக்குப் பின்னுல் ஒரு படை வரிசையை உருவாக்கி வைத்துவிட்டுப் போயிருப்பவர் அண்ணு அவர்கள்தான்!

உள்ளத்தில் இல்லத்தில் உறைந்திருக்கிருர்

அவர் இருக்கும்போதே அவருக்கும் பிறந்த நாள் விழாக் கொண்டாடி—பல்வேறு மாவட்டங்களில் விழா நடத்தி—அவரது காலடியில் பரிசுகளைக் குவித்து வாழ்த்துக்களைப் பெறும் பேறு பெற்றிருந்தோம்!

ஆனுல், கடந்த 2 -- 3 ஆண்டுகளாகத்தான் அந்த வாய்ப்பைப் பெறவில்லை.

ஆயினும், அண்ணு அவர்கள் மறைந்து விடவில்லை; அவர் தமது உள்ளங்களிலும் -- இல்லங்களிலும் இருக்கிருர்! நாம் ஆற்றும் ஒவ்வொரு பணியிலும் இருக்கிருர்! நமது ஊனில்---உதிரத்தில் --- உயிர் மூச்சில் இருக்கின்ருர்!

வாழ்வும் மதிப்பும் அவரால் பெற்ரேம்

எத்தனையோ பேர் தமிழ் அறிஞர்களாக இருந்திருக்கிருர்கள்; இலக்கியக் கட்டுரைகளை- பனுவல்களை—கவிதைகளை யாத்துத் தமிழ்ப் பணி புரிந்திருக்கிருர்கள்; ஆனுல் அவை அனைத்தும், கழுத்தில் போடப்படும் மலர்மாலைகளாகத்தான் இருந்தன.

அண்ணன் தமிழுக்கு ஆற்றிய பணியோ, கழுத்தில் போடப்பட்டதும் எடுத்துப் பத்திரப்படுத்த வேண்டிய கைத்தறி ஆடையாக இருந்தது!

அறிஞர் அண்ணு அவர்கள் எழுதிய தமிழ்தான், தமிழ் மக்களை ஒன்றுசேர்த்தது! தமிழினத்தை ஒன்றுபட வைத்தது! தமிழினத்துக்கு வாழ்வும், மதிப்பும் கொண்டுவந்தது!''

அறுவைச் சிகிச்சைக்கு யாரும் கட்டாயப்படுத்தப்படவில்லை

நல்ல காரியத்தைப் பற்றித் தவருகப் பிரச்சாரம் செய்வது வழக்கமாகிவிட்டது

குடும்ப நலத் திட்டம் பற்றி சட்டப்பேரவைக் கேள்விகட்கு அமைச்சர் க. அன்பழகன் பதில்

சென்னை, அக். 25-

குடும்பக் கட்டுப்பாடு பற்றித் தமிழகச் சட்டப் பேரவையில் கேட்கப்பட்ட கேள்விகளும் -- மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் அளித்த பதில்களும் வருமாறு:—

வகாப் (லீக்):— ''குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் அறுவைச் சிகிச்சையைக் கட்டாயமாகச் செய்கிருர்களே -- என்று வேலூரில் ஒரு எம்.எல்.சி. பேசியிருக்கிருர்; என் தொகுதியான வாலாஜாவில் திருமணமாகாத ஒருவர் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதால் இறந்துவிட்டதாகக் கூறுகிருர்கள்; இப்படிப்பட்ட சம்பவம் நடக்காமல் இருக்க வழி காணப்படுமா?''

அமைச்சர்:— ''சில நல்ல காரியங்கள் செய்யப்படும்போது அதன் நன்மையை உணர்ந்து இருந்தும் அது தவருன காரியம் என்று பிரச்சாரம் செய்வது இயற்கையாகிவிட்டது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கு ஆசிரியர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதில், 'மேல் அதிகாரிகள் கேட்டுவிட்டார்களே' என்பதால்தான், அது கட்டாயம் என்று கருதப்படுகிறது; ஆயினும், 'அவ்வாறு கட்டாயம் கூடாது' என்று கலெக்டர்களிடம் 2 மாதத்திற்குமுன் கூறியிருக்கிறேன்; ஆயினும் நாட்டிற்குச் செய்யவேண்டிய சேவை—கடமை காரணமாக இதைச் செய்வது மாறுபட்டது அல்ல; அதை வளர்க்க நல்ல அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

''நம் நாட்டில்தான் திருமணமாகாதவர்கள் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து இறந்தார்கள் என்று கூறப்படுகிறது; ஆண்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்தால் 6 நாட்கள் வரை மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டும்; அதற்காகத்தான் ஊதிய நட்டமாக ரூ 30 வரை கொடுக்கிருர்கள்.''

ஏ. எம். இராசா (தி. மு. க.):— ''குடும்பக் கட்டுப்பாட்டுப் பரிசு முறைக்குப் பதிலாகக் கருத்தடை கட்டாயம் ஆக்கப்படுமா?''

அமைச்சர்:— ''அம்மாதிரி செய்வது ஒருவரின் தனி உரிமையைப் பாதிக்கும் என்று கூறக்கூடும்; ஆகவே, இதுபற்றிப் பொதுவான கருத்தைத்தான் உருவாக்கவேண்டும்.''

செல்வராசு (தி. மு. க.):— ''அதற்கு முன்னேடியாக, இதுவரை செய்துகொள்ளாத சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் அறுவைச் சிகிச்சைக்கு முதல் சலுகை அளிக்கப்படுமா?''

அமைச்சர்:— ''எல்லோருக்கும் கொடுக்கும் சலுகையோடு வாழ்த்துப் பத்திரமும் கொடுக்கத் தயாராக இருக்கிறேம்.''

வீராசாமி (தி. மு. க.):— ''தமிழ்நாடு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு, அமெரிக்கக் 'கேர்' நிறுவனம் உதவி செய்கிறதா?''

அமைச்சர்:— ''இந்த ஆண்டு அவர்கள் கேரளத்துக்கு உதவுவதாகக் கேள்விப்பட்டேன்; அடுத்த ஆண்டு அவர்கள் நமக்கு உதவ இயலும்.''

முத்தையா (பார்வர்டுபிளாக்):— ''அறுவைச் சிகிச்சை செய்துகொண்டவர்களுக்கு ரூ. 150 ஆகக் கொடுக்கப்படுமா?''

அமைச்சர்:— ''அறுவைச் சிகிச்சை செய்துகொண்டவருக்கு ரூ. 30-ம், அழைத்து வந்தவருக்கு ரூ. 10-ம், மற்றும் மருத்துவமனை செலவெல்லாம் சேர்த்து பார்த்தால் ஒரு நபருக்கு ரூ. 90 செலவாகிறது; தொகை முக்கியமல்ல -- மக்களிடம் ஏற்படக்கூடிய உணர்ச்சிதான் முக்கியம்.''

ஜோதிஅம்மாள் (சிண்டிகேட்):— ''இதற்காக மத்திய அரசின் உதவி அதிகம் வருகிறதா?''

அமைச்சர்:— ''ஆண்கள் உதவி சிகிச்சைக்காக மத்திய அரசு ரூ. 40 கொடுக்கிறது; பெண்கள் அறுவைச் சிகிச்சையை 'கேம்ப்' நடத்திச் செய்தால் சுமார் ரூ. 40 வரை கொடுக்கிருர்கள்; 'கேம்ப்'கள் அதிகம் நடப்பதில்லை.''

பெ. மலைச்சாமி (தி. மு. க.):— சேலை--வேட்டி அறுவைச் சிகிச்சை செய்துகொண்டவர்கட்கு பரிசு கொடுத்தால் மக்களிடத்தில் வரவேற்பு இருக்கிறது; இதை உணர்ந்து அரசு செயல்படுமா?''

அமைச்சர்:— ''சில மாவட்ட கலெக்டர்கள் அரசு அனுமதியுடன் அவ்வாறு செய்கிருர்கள்.''

பொன்னுமலை (தி.மு.க.):— ''ஆண்களைவிடப் பெண்கள் அதிகமாகக் கருத்தடை செய்துகொள்கிருர்கள்; எனவே, அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுமா?''

அமைச்சர்:— ''பெண்களும் இதில் இடம் பெறலாம் என்று நம்புகிறேன்.''

சுரேந்திரன் (சோச):— ''கருச்சிதைவு சட்டபூர்வமாக்கப்பட்டிருக்கிறதா?''

அமைச்சர்:— ''மத்திய அரசு இந்தச் சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறது; சில விதிமுறைகளுக்கு உட்பட்டு கருச்சிதைவு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

குடிசைவாழ் மக்கள் துயர் துடைக்க ரூ.25,000

நிரந்தர நிவாரணம் கிட்ட அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்

சட்டப் பேரவையில் முதல்வர் அறிவிப்பு

சென்னை அக். 25—

சென்னை நகரில் கடும் மழையினுல் ஏற்பட்ட விளைவுகள் குறித்து விவாதிக்கச் சட்டமன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது; அதற்குப் பதிலளித்துப் பேசுகையில் முதல்வர் கலைஞர் அவர்கள், முதலமைச்சர் துயர் தணிப்பு நிதியிலிருந்து ரூ. 25 000 அளிப்பதாக அறிவித்தார். அவர் பேசியதாவது:—

''சென்னை நகரில் வெள்ளம் ஏற்பட்டாலும் -- தீ விபத்து ஏற்பட்டாலும், பெரும்பாலும் பாதிக்கப்படுவது குடிசைவாழ் மக்களேயாவர்; ஆகவேதான், குடிசைகளை நல்ல வீடுகளாக மாற்றியமைக்கக் குடிசைமாற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டு -- அந்த வாரியம் சிறப்பாகப் பணியாற்றிவருகிறது.

சென்னையில் மட்டும் 602 குடிசைப் பகுதிகள் உள்ளன; இவற்றை இன்று தொடங்கி நாளைக்குள் மாற்றிவிட முடியாது.

புறம்போக்கு நிலமாக இருந்தால் உடனே கட்டிவிட முடியும்; தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாக இருந்தால் அவர்கள் விட்டுக் கொடுக்கச் சம்மதிப்பதில்லை; அந்த நிலத்தைக் கையகப்படுத்தி வைத்திருப்பவர்கள் பேரம் பேசுகிருர்கள் -- காலந்தாழ்த்துகிருர்கள்; சிலர், தாங்களே அந்தப் பகுதிகளில் குடிசைகளைக் கட்டி வாடகைக்கு விடுவதன் மூலம் அதிக வருமானம் சம்பாதிக்கிருர்கள்.

இந்நிலையில், 602 குடிசைப் பகுதிகளில் நல்ல மாடி வீடுகளைக் கட்டி -- அவற்றில் குடிசைவாழ் மக்களைக் குடியமர்த்த ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது; பல இடங்களில் மாடிக் குடியிருப்புகள்

(1-ம் பக்கம் பார்க்க)

பேரறிஞர் அண்ணா தந்துச் சென்ற ஆயுதம்

ஆதிக்கப் பலத்தை வீழ்த்த நமக்குப் பயன்படுகிறது

இந்திய அரசியலில் தனி வரலாறு படைத்த சிறப்பு — பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, அக். 26—

"பத்திரிகை பலம் — பண பலம் — சாதி பலம் — ஆதிக்க பலம் ஆகியவற்றை நாக்கு ஒன்றினாலேயே எதிர்த்து வீழ்த்த முடியும் என்று மெய்ப்பித்துக் காட்டியவர் அறிஞர் அண்ணா அவர்களாவார்!

"அத்தகைய அண்ணாவின் பாசறையில் படித்த பாடத்தின் விளைவாகத்தான், சென்ற தேர்தலில் அந்தப் பலங்களை — ஆதிக்க பலங்களைத் தோற்கடித்துக் காட்டினோம்!

"களத்திலே போராடுகின்ற வீரனுக்குக் கேடயமும் — வாளும் தேவை; அதுபோல், அரசியல் களத்தில் போராடக் கேடயத்தையும் — வாளையும் தந்தவர் அண்ணா!"

என்று, பொதுச்செயலாளர் — கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் தெளிவுறச் சுட்டிக்காட்டி விளக்கினார்.

இளைஞர் தி.மு.க. சார்பில் நடைபெற்ற அண்ணா பிறந்த நாள் விழாவில் அவர் ஆற்றிய உரையாவது :—

சொற்களைச் செயலாக்கிக் காட்டியவர் அண்ணா

"தமிழைப்பற்றிக் கூறும்போது, 'ஆயும்தோறும் ஆயுந்தோறும் என்றென்றும் தமிழ்' என்று சொல்லுவார்கள்.

அதுபோல், எண்ணும்போதும் — பேசும்போதும் — எழுதும் நமக்கு இன்பம் ஊட்டுபவர் அண்ணா!

எத்தனையோ தலைவர்கள் சொற்களை அள்ளி அள்ளி வீசியிருக்கிறார்கள்; ஆனால் சொற்களை அளந்து சொன்னவர் அண்ணா! அந்தச் சொற்களைச் செயல்படுத்திக் காட்டியவரும் அண்ணா!

மூளையைக் கவருவது அறிவு; இதயத்தைக் கவருவது கலை; அண்ணா அவர்கள், அறிவாலும் — கலையாலும், தமிழகத்தாரின் மூளையையும் இதயத்தையும் கவர்ந்தவர்!

பிற எழுத்தாளர்கள், ஒரு பக்கம் எழுதுவதற்கு ஒரு நாளாகும்; சில எழுத்தாளர்கள், ஒரு பக்கத்தில் ஒரு எழுத்தை எழுதிவிட்டு அடுக்குச் சொல்லுக்கு அலைவார்கள்; எதுகைக்கு எங்கோ தேடுவார்கள்!

இன்னும் சிலர், அகராதியை வைத்துக்கொண்டு தேடுவார்கள்!

சிலருக்கு 'மூடு' வந்தால்தான் எழுத முடியும்; அந்த 'மூடு' வருவதற்குக்கூட, பெங்களூர் — பாண்டிச்சேரி போய்வரக் கூடும்; அங்கு போனால்கூடச் சில பல ஏற்பாடுகள் செய்தால்தான் வரும்!

உரைநடையில் கவிதை நயம் காட்டிய மேதை

உரைநடையில் கவிதை நயம் காட்டியவர் அண்ணா!

அரண்மனையில் நடமாடிய தமிழை ஆலமரத்தடிக்குக் கொண்டுவந்தவர் அண்ணா!

அண்ணாவுக்கு முன்னும் தமிழ் இருந்தது — அண்ணாவுக்குப் பின்னும் தமிழ் இருக்கிறது; ஆனால், அண்ணா வந்தபிறகுதான் தமிழ் இருக்க வேண்டிய இடத்தில் இருக்கிறது!

மேலைத் தமிழிலேயே நல்ல தமிழைப் புகுத்தியவர் அண்ணா!

முப்பதாண்டுக் காலத்துக்குமுன், 'மகா ஜனங்கள்'தான் இருந்தார்கள்; அண்ணா வந்ததற்குப் பின்னர்தான், 'பொதுமக்களே' வந்தார்கள்!

அண்ணாவுக்குமுன், 'சீமான்களே — சீமாட்டிகளே — சகோதர சகோதரிகளே' என்றுதான் மேடைகளில் அழைத்து வந்தார்கள்.

'மகாராஜ ர-ஜஸ்ரீ'தான் இருந்தது — உயர்திரு இல்லை; 'க்ஷேமம் — க்ஷேமத்திற்குப் பதில்'தான் இருந்தது; 'நலம் — நலமறிய அவா' இல்லை; 'விவாக சுப முகூர்த்தம்'தான் இருந்தது; 'திருமணம்' இல்லை!

அண்ணா வந்ததற்குப் பின்னர்தான், இதெல்லாம் நல்ல தமிழில் வந்தது!

மக்கள் மனத்தில் ஏற்றிக் காட்டினார்

நல்ல தமிழைத் தமிழறிஞர்கள் தம் பக்கம் வைத்துக்கொண்டனர்; ஆனால் அண்ணாவோ, தமிழின் பக்கம் மக்களை அழைத்துச் சென்றார்! எவ்வளவு பெரிய கடினமான பொருளாதாரக் கருத்தாக இருந்தாலும் — அரசியல் கருத்தாக இருந்தாலும், அவைகளைச் சிறு சிறு உவமைகள்மூலம் விளக்கி — எளிதாக்கி, அந்தக் கருத்துக்களை மக்கள் மனத்தில் ஏற்றிக் காட்டினார்.

சிலர் கட்டுரை எழுதும்போது, உவமைகளிடம் போய் நின்றுகொண்டு கெஞ்சுவார்கள்; ஆனால் அண்ணா அவர்களிடமோ, உவமைகள் தானே சென்று, 'என்னை எடுத்துக்கொள் — என்னை எடுத்துக்கொள்' என்று கெஞ்சும்!

எந்த ஒரு முடிவுக்கும் அவசரப்படமாட்டார்

அண்ணா அவர்கள் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வரமாட்டார்; எவ்வளவு நாளானாலும் விவாதித்து, ஒவ்வொருவரது கருத்தையும் கேட்டறிந்து முடிவு செய்வார்.

'திராவிட நாடு பிரச்சினையை விடுவதா வேண்டாமா' என்ற கேள்வி எழுந்தபோது, எங்களைப் போன்றவர்களையெல்லாம் கூட்டிவைத்து, அதில் வரும் சாதக — பாதகங்களை எல்லாம் ஆராய்ந்த பின்னர்தான், அவர் ஒரு முடிவுக்கு வந்தார்.

ஏதாவது ஒரு பிரச்சினையில் ஒரு முடிவுக்கு வந்துவிட்டால், அதை எங்களிடம் சொல்லமாட்டார்; 'இது என் முடிவு — இதைச் செய்' என்றும் சொல்லமாட்டார்; நாங்கள் அந்த முடிவுக்கு வரும்வரை காத்திருப்பார்!

ஆழமாகச் சிந்திப்பார்!

திராவிடர் கழகத்திலிருந்து தி.மு. கழகம் பிரிந்த நேரத்தில், கலைஞரைப் போன்றவர்களும் — என்னைப் போன்றவர்களும், 'திராவிடர் கழகத்தின் சொத்துக்களை நாமே எடுத்துக்கொள்ள வேண்டும் — பெரியாருடன் போராட வேண்டும்' என்று கூறினோம்.

ஆனால் அண்ணா அவர்கள், 'அந்தச் சொத்துக்களைப் பெரியாரிடத்திலேயே விட்டுவிடுவோம் — நாம் தனியாகக் கட்சி ஆரம்பிப்போம்' என்று கூறினார்கள்.

நாங்கள் எங்கள் கருத்தை வலியுறுத்தினோம்; அதற்கு ஒப்புக்கொள்ளாமல் அண்ணா அவர்கள் காஞ்சிபுரம் போய்விட்டார்கள்; ஒரு வாரம் வரைக்கும் அவர் திரும்பிவரவில்லை; பிறகு நாங்களே தேடிக்கொண்டு போனோம்.

"என் தலைமை வேண்டுமானால் பெரியாருடன் போராடக் கூடாது; போராடத்தான் வேண்டுமென்றால், நீங்களே கட்சியை ஏற்று நடத்துங்கள்; நான் உறுப்பினனாக இருப்பேன் — தலைவனாக இருக்கமாட்டேன்; ஏனென்றால், நாம் போராட வேண்டியது பெரியாருடன் அல்ல — மற்றவர்களுடன்தான்" என்று கூறினார்.

இறுதியில் அவர் விருப்பப்படிதான் தி. மு. கழகம் துவக்கப்பட்டது; அதுகூட, மூன்று மாதம் கழித்துத்தான் துவக்கப்பட்டது!

அவ்வளவு தூரம் ஆழமாகச் சிந்தித்து ஆர அமரத்தான் முடிவுகளை எடுப்பார்!

நயம்பட உரைப்பது அவரது சிறப்பு

அவரது பொது வாழ்வில், ஒன்றைச் சொல்லிவிட்டுப் பிறகு அதற்காக வருந்தியதாக ஒரு நிகழ்ச்சிகூட இல்லை.

ஒன்றை எழுதிவிட்டு, 'அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்' என்று எழுதியதும் இல்லை.

ஆனால் இப்போது வெளியிலும், சட்டமன்றத்திலும் பார்க்கிறோம் — ஒரு நிமிடத்திற்குமுன் சொன்னதை மறு நிமிடத்தில் திரும்பப் பெற்றுக்கொள்கின்ற காட்சியை!

அவரது பொதுவாழ்வில் அவர் சந்திக்காத இழிமொழிகள் இல்லை — பழிமொழிகள் இல்லை!

'இழித்துப் பழிப்போரின் வாய் வலிக்கட்டும் — அதை விரும்பிக் கேட்போரின் காது வலிக்கட்டும்' என்பார்! 'வாழ்க வசவாளர்கள்' என்றுகூட நயம்பட உரைப்பார்!

இந்தியச் சரித்திரத்திலேயே — வலிவு கொண்ட கட்சிகளிடையே சாதாரணமான ஒரு தனி மனிதர், ஒரு கட்சியைத் தொடங்கி — 18 ஆண்டுகளில் ஒரு மாநிலத்தையே கைப்பற்றும் வெற்றியைப் பெற்றவர், அண்ணாவைத் தவிர வேறு யாருமில்லை!

காங்கிரசுக் கட்சியைத் துவக்கியவர் — ஹியூம் என்ற வெள்ளையர்; அதனை வளர்த்தவர்கள் தாதாபாய் நௌரோஜி — திலகர் — கோகலே; ஆனால் காந்தியார் இடையிலே வந்து தமது அரும்பணியால் அந்தக் காங்கிரசுக் கட்சியை நாடாளும் கட்சியாக மாற்றினாரே தவிர, அவர் ஒரு கட்சியைத் தொடங்கி — அந்தப் பெருமையை அவர் அடைந்ததில்லை!

இத்தகைய தனிப் பெருமைகளுக்கெல்லாம் உரிய ஒரே தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள்தான்!"

விதைப் பண்ணைகள்

நட்டம் ஏற்படும் நிலை பற்றி அமைச்சர் அன்பில் தர்மலிங்கம்

சென்னை, அக் 25—

"1967-க்கு முன்பு துவக்கப்பட்ட பண்ணைகள்தான் நட்டத்தில் நடைபெறுகின்றன; மேம்பாடு செய்தாலும் பலன் கிடைக்காது என்ற நிலையில் உள்ள இப்படிப்பட்ட பண்ணைகளை மூடிவிட இருக்கிறோம்.

"முன்பு, எந்த அடிப்படையில் இப்படிப்பட்ட பண்ணைகள் துவக்கப்பட்டனவோ தெரியாது; இந்த அரசு, நில வளத்தையும் பார்த்து — தகுதிச் சான்றுகள் பெற்றுத்தான் பண்ணைகளைத் திறக்கிறது"

என்று வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள், சட்டமன்ற மேலவையில் தெரிவித்தார்.

அரசு விதைப் பண்ணைகள் பற்றிச் சுதந்தராக் கட்சி உறுப்பினர் சுவாமிநாதன் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் கூறியதாவது :—

"ஏற்கனவே 59 அரசுப் பண்ணைகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன; புதிதாகத் திருச்சியில் அறிஞர் அண்ணா விதைப் பண்ணை துவக்கப்பட்டிருக்கிறது.

இந்த 60 அரசு விதைப் பண்ணைகளில் இப்போது 11 விதைப் பண்ணைகள் நட்டத்தில் நடைபெறுகின்றன.

இது சம்பந்தமாக விதைப் பண்ணைகள் பார்வையிடப்பட்டு, எவையெவை இலாபகரமாக இல்லையோ அவற்றையெல்லாம் மூடிவிடவும், அவை மீண்டும் நடக்கக்கூடிய நிலையில் இருக்கின்றனவா என்பதை ஆய்ந்து — அவற்றை இயங்க வகை செய்யவும் அரசு பரிசீலித்துவருகிறது.

மணிமுத்தாறு பண்ணையில் நீர்ப்பாசன வசதிக்காகக் குழாய்களைச் சீர்படுத்தி நீர் வழங்கும் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

1970-ஆம் ஆண்டு வரையில் இலாபத்திலேயே நடைபெற்றது; கடந்த அரை ஆண்டுக்கு முன்பு பருவமழை தவறியதால் நட்டம் ஏற்பட்டிருக்கிறது.

அடுத்ததாக, தேவகோட்டையில் புன்செய்ப் பகுதிகள் வறண்டுவிட்ட காரணத்தால் நட்டம் ஏற்பட்டது.

இந்தப் பகுதியில் மேலும் இரண்டு கிணறுகளைத் தோண்டிப் பாசன வசதி செய்யப்பட்டுள்ளது."

வங்க அகதிகளைப் பராமரிக்க..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநில முதலமைச்சர்களும் இதற்கு ஒப்புதல் தெரிவித்திருந்தனர்.

எந்தெந்த இனங்கள்மீது மாநில அரசுகள் வரி விதிக்கலாம் என்பது பற்றிச் சில விவரங்கள் கிடைத்திருக்கின்றன.

திரைப் படம் காட்டுதல் — நாடகங்கள் — கண்காட்சிகள் — விளையாட்டுப் பந்தயங்கள் ஆகியவைகளுக்கு விற்கப்படும் டிக்கெட் ஒன்றுக்கு ஐந்து காசுகள் வீதம் 'சார்சார்ஜ்' விதிக்கப்படும்.

ஓட்டல்கள் — உணவு விடுதிகளில் கொடுக்கப்படும் ஒவ்வொரு 'பில்'லின்மீதும் இத்தகைய 'சார்சார்ஜ்' விதிக்கப்படலாம்.

இந்த இனங்களெல்லாம் மாநில அரசுகளின் பட்டியல்களில் இருக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செங்குத் தெரு, சென்னை-1) அச்சிட்டு; [illegible] வெளியிடப்படுகிறது.

போர் மூள விட்டுவிட்டுப் பழியை ஏற்காதீர்

உலக வல்லரசுகளுக்குப் பிரிட்டிஷ் பிரமுகர் எச்சரிக்கை

இலண்டன், அக். 26—

"இந்தியத் துணைக் கண்டத்தில் ஏதேனும் போர் மூளுமானால், அதற்கான பழி உலக நாடுகளையே வந்து சேரும்"

என்று பிரிட்டிஷ் பிரமுகர் ஜான் கிரிக் எச்சரித்தார்.

'சுதந்தரச் சிந்தனையாளர்' என்று புகழப்படும் ஜான் கிரிக், 'சண்டே அப்சர்வர்' பத்திரிகையில் எழுதியுள்ள இரண்டாவது கட்டுரையில் இந்த எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

இரண்டு வாரங்களுக்குள் அவர் இவ்வாறு எச்சரிப்பது இரண்டாவது தடவையாகும்.

இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தியின் உலகச் சுற்றுப்பயணம் துவங்குவதைக் குறிப்பிட்டு அவர் எழுதுவதாவது:—

"சமாதானத்துக்காகச் செய்யும் இம்முயற்சியில் அவர் தோற்றுப் போனால், உலகத்துக்கு நேரிடக்கூடிய தீங்குக்கான பழி அவரைச் சேராது!

திருமதி இந்திரா, சமாதானம் புறாதான் — சந்தேகமில்லை; ஆனால் கூர்மையான நகங்கள் படைத்த புறா; எனவே சமாதானத்துக்காகச் செய்யும் முயற்சியில் தோல்வியடைந்தால், அவர் போர் புரியத் தயங்கமாட்டார்!

பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளருக்கு எதிராகப் பெரும் வல்லரசுகள் ஒருமித்த முயற்சி எடுத்தால் மட்டுமே இந்தியாவுக்கும் — பாகிஸ்தானுக்கும் இடையில் முழுப் போர் மூளுவதைத் தடுக்க முடியும்."

வாழைப்பழ உற்பத்திக்குத் தீவிரத் திட்டம்

விற்பனை வசதிகளைப் பெருக்க நடவடிக்கை

சென்னை, அக். 25—

வாழைப் பழ உற்பத்தி பற்றிச் சட்டப் பேரவையில் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும் — அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் அளித்த பதில்களும் வருமாறு :—

ஆனந்தநாயகி (சிண்டிகேட்) :— "வாழைப்பழம் உற்பத்தி செய்வதற்காகத் தீவிரத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும்கூட, மார்க்கெட்டுக்கு வாழைப்பழங்கள் வர வசதியில்லாமல் இருக்கிறதே!"

அமைச்சர் :— "உற்பத்தியான வாழைப்பழம் மார்க்கெட்டுக்கு வருவதற்கு உரிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன; அது சம்பந்தமாக நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது."

பொன்னப்ப நாடார் (சிண்டிகேட்) :— "நெல்லை மாவட்டம் தூத்துக்குடியிலிருந்து வாழைப்பழம் ஏற்றுமதி செய்வதற்கான சிறப்புத் திட்டம் எதுவும் உண்டா?"

அமைச்சர் :— "தற்போது எதுவும் இல்லை."

ஏ. எம். இராஜா (தி.மு.க.) :— "ஏற்றுமதிக்கு உதவும் குட்டை வாழையில் பூச்சி உண்டாகிறது; மருந்து தெளித்தும் பயனில்லை; புதுமுறை நடவடிக்கை எடுக்கப்படுமா?"

அமைச்சர் :— "தீவிர வாழை சாகுபடித் திட்டத்தின்கீழ் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்."